செய்தி வெளியீடு எண் –611 நாள் : 21.07.2010

**சமூக பொறுப்புணர்வுடன் செயல்பட்ட வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் விருது வழங்கினார்**

வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள் தங்களது சமூகப் பொறுப்பின் ஒரு பகுதியாக பாராட்டத் தக்க வகையில் பல்வேறு சமூக பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் ஆண்டுதோறும் சிறந்த வர்த்தக தொழில் நிறுவனங்களை தேர்ந்தெடுத்து, தலா 5 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், நற்சான்றிதழும் வழங்கப்படும் என 2007–08ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார். இத்தகைய விருது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஊரகப் பகுதிகள் மற்றும் நகரங்களிலுள்ள குடிசைப் பகுதிகள், விவசாயம், கால்நடை, கல்வி, பொதுச் சுகாதாரம், குடிநீர், மழைநீர் சேகரிப்பு, மரபு சாரா எரிசக்தி, வேளாண் பொருட்கள் சந்தைப்படுத்துதல், சுய உதவிக் குழுக்கள் மற்றும் வாழ்வாதார மேம்பாடு, பெண்கள், குழந்தைகள், இளைஞர் நலன், மரக்கன்றுகள் நடுதல் போன்ற சமூக நல மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடும் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் வகையில் இவ்விருது வழங்கப்படுகிறது.

அனைத்து பொதுத் துறை, அரசு சார்ந்த நிறுவனங்கள், தொழில், சேவை மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் அதன் கூட்டமைப்புகளும் இவ்விருது பெற தகுதி உடையவை ஆகும். இந்த நிறுவனங்கள் கடந்த 5 ஆண்டுகளில் பாராட்டதக்க சமூக நல மேம்பாட்டு பணிகள் மேற்கொண்டிருந்தால், அத்தகைய பணிகள் விருது பெற தகுதியானவையாக எடுத்துக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி 2007–08ஆம் ஆண்டிற்கு 5 நிறுவனங்களும், 2008–09ம் ஆண்டிற்கு 5 நிறுவனங்களும் தேர்வு செய்யப்பட்டு, நற்சான்றிதழ்களும், பரிசுத் தொகையும் வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, 2009–10ஆம் ஆண்டிற்கு, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், உறஂண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனம், பன்னாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம், டைட்டான் இன்டஸ்டிரீஸ் நிறுவனம், சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் தனியார் நிறுவனம் ஆகிய 5 நிறுவனங்களும் விருது பெற தேர்வு செய்யப்பட்டன.

தேர்வு செய்யப்பட்ட இந்த ஐந்து நிறுவனங்களுக்கும், தலா 5 இலட்ச ரூபாய்க்கான பரிசுத் தொகையும், நற்சான்றிதழும் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களால் 21.07.2010 அன்று வழங்கப்பட்டது. விருது பெற்ற அனைவருக்கும் தனது வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் துணை முதலமைச்சர் தெரிவித்தார். மேலும், பொதுமக்களுக்கான தங்களது சேவையினைத் தொடர்ந்து நிறைவேற்றி வருமாறும் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வின்போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் திரு.கா. அலாவுதீன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு. த. உதயச்சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * * * * * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.